**செய்தி வெளியீடு எண்: 711** **நாள்: 05.10.2018**

# செய்தி வெளியீடு

சவூதி அரேபிய அமைச்சகத்தின், ரியாத்தில் உள்ள கிங் சவுத் மெடிக்கல் சிட்டி (King Saud Medical City) மருத்துவமனையில் பணிபுரிவதற்கு இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 55 வயதிற்க்குட்பட்ட கண்சல்டண்டுகள் (Consultants) மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கான (Specialists) நேர்முகத் தேர்வு 28.10.2018 முதல் 31.10.2018 வரை புது டில்லியில் நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் சிறப்பு மருத்துவர்களுக்கு அனுபவத்திற்கேற்ப ரூ.1.84 இலட்சம் முதல் ரூ.5.09 வரை மாத ஊதியமாக வழங்கப்படும்.

மேலும், கண்சல்டண்ட் மருத்துவர்களுக்கு ரூ.2.42 இலட்சம் முதல் ரூ.7.59 இலட்சம் வரை மாத ஊதியமாக வழங்கப்படும்.

இது தவிர, இலவச விமான டிக்கெட், உணவு, இருப்பிடம், பேமிலி விசா, மருத்துவச் சலுகை, போக்குவரத்து, 30 நாட்கள் சம்பளத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு மற்றும் சவூதி அரேபியா அமைச்சகத்தின் சட்டத்திட்டத்திற்க்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ள மருத்துவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட், ஆதார் நகல் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemclmohsa2018@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.10.2018க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு 22505886/22502267/8220634389/ 9566239685 என்ற தொலைபேசியிலும் அல்லது www.omcmanpower.com என்ற வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு நிறுவனத்தின் முகவர் எண் Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84, ஆகும்.

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

**வெளியீடு: இயக்குநர்,செய்தி மக்கள் தொடர்புத்துறை,சென்னை–9**